**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No.63/2020 தேதி- 21.04.2026
(PW.2) – ஜெனி

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-**

1.இந்த வழக்கு பட்டிகை A சொத்தை எங்கள் அம்மாவிற்கு Release Deed மூலம் எழுதிக் கொடுத்தோம் என்றால் விலை ஆவணத்தின் மூலம் எழுதிக் கொடுத்தோம். எந்த வருடத்தில் மேற்சொன்ன ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் 2007 ஆம் ஆண்டாகும். 2007 ஆம் ஆண்டில் எவ்வளவு சென்ட் சொத்தை விலை ஆவணமாக எழுதிக் கொடுத்தோம் என்றால் 18 சென்ட் சொத்தாகும். 18 சென்ட் சொத்து தான் இந்த வழக்கின் A பட்டிகை சொத்து என்றால் சரிதான்.

2.2007 ஆம் ஆண்டில் தான் என் அப்பா வழக்கு A பட்டிகை சொத்தை விலைக்கு வாங்கினார் என்றால் சரிதான். வழக்கு A பட்டிகை சொத்தின் வடக்கே யாருடைய சொத்து உள்ளது என்றால் பத்ரோஸின் சொத்து உள்ளது. வடக்கே பத்ரோஸின் சொத்து இல்லை என்றாலும், அமோசின் சொத்து அமைந்துள்ளது என்றால் சரியல்ல. மேற்சொன்ன வழக்கு A பட்டிகை சொத்தில் 3 சென்ட் சொத்து எந்த திசையில் எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் வடக்கு பக்கம் உள்ள சொத்தில் எழுதிக் கொடுக்கப்பட்டது.

3.வழக்கு A பட்டிகை சொத்தின் வடக்கு பக்கம் அமல்ராஜின் சொத்து தான் அமைந்துள்ளது என்றால் சரிதான். அமல்ராஜ் வாங்கிய 3 சென்ட் சொத்தில் வீடு உள்ளதா என்றால் இல்லை, கல்லறை அமைந்துள்ளது. மேற்சொன்ன கல்லறைக்கு எந்த பாதையின் வழியாக சென்று வருகிறார்கள் என்றால் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி பாதை இருந்தது, தற்போது சகாயஜார்ஜ் என்பவர் காம்பவுண்ட் சுவர் அமைத்து பாதையை அடைத்துவிட்டார்.

4.வழக்கு A பட்டிகை சொத்தின் நான்கு பக்க எல்கை தெரியுமா என்றால் தெரியும், கிழக்கு பக்கம் அமோசின் சொத்தும், மேற்கு பக்கம் அமோசின் சொத்தும், வடக்கு பக்கம் அமல்ராஜின் சொத்தும் மற்றும் தெற்கு பக்கம் அமோசின் சொத்தும் அமைந்துள்ளது. வழக்கு A பட்டிகை சொத்தை தொட்டு வடக்கு, கிழக்கு மற்றும்

மேற்கு பகுதிகளில் அமோசின் சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். அமோஸ் என்பவர் ஞானக்கண் நாடார் என்பவருடைய வாரிசு என்றால் சரிதான். ஞானக்கண் நாடார் மகனிடமிருந்து வழக்கு A பட்டிகை சொத்தை விலைக்கு வாங்கினோம்.

5.வழக்கு A பட்டிகை சொத்தை தொட்டு மேற்சொன்ன ஞானக்கண் நாடாரின் வாரிசுத்தாரருக்கு தான் சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான், தற்போது வேறு ஒரு நபருக்கு விலைக்கு கொடுத்துவிட்டார்கள்.சரஸ்வதியின் சொத்து வழக்கு A பட்டிகை சொத்தின் எந்த திசையில் அமைந்துள்ளது என்றால் தெற்கு பக்கம் அமைந்துள்ளது. சரஸ்வதிக்கு ஞானக்கண் நாடார் எவ்வளவு சென்ட் சொத்தை விலைக்கு கொடுத்தார் என்றால் 40 சென்ட் சொத்தை விலைக்கு கொடுத்தார்.

6.மேற்சொன்ன சொத்தை யாரெல்லாம் விலைக்கு வாங்கினார்கள் என்றால் ஆன்டனி என்பவர் 10 சென்ட் சொத்தை விலைக்கு வாங்கினார், அதன் பிறகு ஆன்டனியிடமிருந்து சகாயஜார்ஜ் சொத்தை விலைக்கு வாங்கியுள்ளார். மீதமுள்ள சொத்துக்கள் யாருடைய கைவசத்தில் உள்ளது என்பது எனக்கு தெரியாது. சரஸ்வதிக்கு ஞானக்கண் நாடார் எழுதிக் கொடுத்த மொத்த சொத்தின் மேற்கு பக்கம் உள்ள பாதையை தடை செய்யக்கூடாது என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7.இந்த வழக்கின் பிரதிவாதிக்கு விலைக்கு கொடுத்த நபர் சரஸ்வதியிடமிருந்து இருந்து சொத்தை விலைக்கு வாங்கவில்லை என்றால் சரியல்ல, சரஸ்வதியிடமிருந்து அண்ணன் அமோஸ் என்ற ராஜனுக்கு விலைக்கு கொடுத்தார், அதன்பிறகு ஆன்டனி என்பவருக்கு விலைக்கு கொடுக்கப்பட்டது, அதன் பிறகு சகாய ஜார்ஜிற்கு விலைக்கு கொடுக்கப்பட்டது. சரஸ்வதியின் 40 சென்ட்டை அளந்து திட்டப்படுத்தி அந்த ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள பாதையை நிர்ணயம் செய்ய நீதிமன்ற ஆணையரிடம் எந்த குறிப்பாணையும் வழங்கவில்லை என்றால் சரியல்ல.

8.மேற்சொன்ன 40 சென்ட் நிலத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவரம் தெரியுமா

என்றால் தெரியும். நீதிமன்ற ஆணையர் பார்வையிட்ட போது நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிகாக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).